தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய சுவடிக் காப்புத் திணைக்கத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்கத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சுவடிக் காப்புத் திணைக்கத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்கத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் அரச உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் ‘‘பி’’ கணக்கில் திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் இறுதி மீதி ரூபா 20,297,664 ஆகவும் திறைசேரி புத்தகத்தின் பிரகாரம் அந்த மீதி ரூபா 20,285,893 ஆக இருந்தது அந்த மீதிக்களுக்கு இடையில் உள்ள வேறுபாடான ரூபா 11,772 அடையாளம் கண்டு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பல வருட காலமாக காணப்பட்டு வருகின்ற முற்பன கணக்குகளின் மீதியை சீர் செய்யும் போது மேலும் கண்டறிய முடியாத பெறுமதி ஒன்றாக ரூபா 11,772/- காணப்படுவதுடன் அதை எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திரைசேரி புத்தகங்களுக்கு இடையிலுள்ள வேறுபாட்டை அடையாளம் கண்டு சீர் செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனம் பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 டிசம்பர் 09 ஆம் திகதிய 05/2021 இலக்கமுடைய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பிடப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்துக்கு உரித்தான வாகனங்களின் பெறுமதிகளை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் ரூபா 17,484,320 ஆக இறுதி நிதி கூற்றினுள் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தினுள் (2024) வாகனங்களின் பெறுமதியை மதிப்பிட்டு நிதி கூற்றினுள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்று நிருப அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | திணைக்களத்தின் பிரதான அலுவலகக் கட்டிடம் அமைந்துள்ள காணி 2023 ஆகஸ்ட் 26 ஆம் திகதியிலும் கண்டி பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள காணி 2022 ஜூலை 20 ஆம் திகதியிலும் திணைக்களத்துக்கு உரித்தாக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காணிகளின் பெறுமதிகளை மதிப்பிட்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2012 ஆம் வருடத்தில் இருந்து அலுவலக நடவடிக்கைகளுக்காக பாவனைக்கு ட்படுத்தப்படுகின்ற புதிய B கட்டிடம் மற்றும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் திருத்தக் கிரயமான ரூபா 470,780,777வும் ஆன புணரமைப்பு நடவடிக்கை கைவிடப்பட்டு காணப்படுகின்ற பிரதான அலுவலகம் A கட்டிடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | B கட்டிடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டுள்ளது. A கட்டிடம் தற்பொழுது புணரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாதிருப்பதுடன் நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர் மதிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | 2018 டிசம்பர் 31 ஆம் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றுநிருப அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கண்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தினைக்களம் நிதி கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து நடாத்திச் செல்லப்படுவதாக பிரதான கண்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கண்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை ஆக்கபூர்வமாக செயற்படுத்திச் செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், இந்த மீளாய்வை ஆவணரீதியாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த போதும், அவ்வாறான மீளாய்வொன்றை மேற்கொண்டதற்கான கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. | உள்ளக கட்டுபாட்டு முறைமைகள் தொடர்பாக அவ்வப் போது மீளாய்வு செய்து 2024 ஆம் வருடத்திளிருந்து கணக்காய்விற்கு சமரப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | | |
| | ரூபா | | | |
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 12ஆம் இலக்க அரச நிதி சுற்று நிருபத்தின் I பகுதியின் 3.1 பந்தியின் நிதிப் பிரமாணம் 113 (6)(ஆ) இன் கீழ் முற்பணங்கள் "பி" கணக்கின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்பட்ட கடனை அறவிடும் போது மேற்கொள்ளப்பட | 1,152,543 | இடமாற்றம் பெற்றுச் சென்ற 04 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 20 வருடங்களை விஞ்சிய ரூபா 123,614 மற்றும் காலம் சென்ற, ஓய்வு பெற்ற, வேலையில் இருந்து நீக்கப்பட்ட மற்றும் வேலையை கைவிட்டுச் சென்ற 11 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 01 தொடக்கம் 03 வருட காலங்களிலான நிலுவை ரூபா 1,028,929 கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை | அறவிட்டுக் கொள்வதற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | வழிகாட்டல்கள் இலக்கம் 01 இன் (அ), (ஆ) மற்றும் (இ) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டிய வழிகாட்டல்கள் இலக்கம் 01 | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பிரதான அலுவலக கட்டிடத்தின் சுவடிகளை பாதுகாப்பாக வைப்பதற்காக மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 50,000,000 வினால் 2023 ஆம் வருடத்தில் நிர்மாணிக்கப்பட்டு முடிப்பதற்கு திட்டமிடப்பட்ட நடமாடும் இராக்கை கட்டமைப்பின் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 05 மட்டுமே ஆனதுடன் நிதி முன்னேற்றம் காணப்படவில்லை. | தற்போது பொருத்தமான விநியோகத்தர் ஒருவருக்கு விலை மனுக் கோரலொன்றை பெற்றுக் கொள்வதற்காக விலை மனு திறக்கப்பட்டு தொடர் நடவடிக்கைகளுக்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | திட்டமிட்டதன் பிரகாரம் இலக்கை அண்மிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 500 டெராபைட் உடைய டிஜிட்டல் காப்பகம் ஒன்றை நிறுவுவதற்காக 2021 ஏப்ரல் 05ஆம் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் 05 வருடங்களுள் ரூபா 120,208,320 கிரயத்தின் கீழ் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மீளாய்வாண்டிற்கு உரிய ரூபா 78,300,000 ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) ஒன்றுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள இருந்த போதிலும் 2023 செப்டம்பர் 19ஆம் திகதி எனது DNA/15/ARO1/1/1(11) கடிதத்திற்கு மறுமொழியாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் தலைவரினால் அனுப்பப்பட்ட கடிதத்தின் ஊடாக பதவி அணியினர்களின் பற்றாக்குறை போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டு விசேட அறிவுள்ள ஒருவரின் உதவியை பெற்றுக் கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. வரைவு அமைச்சின் செயலாளரின் MBRCA/03/PRO/02/SOFTWARE ஆம் இலக்க மற்றும் 2024 மார்ச் | டிஜிட்டல் காப்பகத்தை நிறுவும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக. |

| | | |
|---|---|---|
| | 14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஆலோசகர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவை பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் ஏனைய நடவடிக்கைகளுக்காக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. | |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆம் வருடத்தில் திணைக்களத்தின் புதிய கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள 23 CCTV கேமராக்களில் இதுவரை செயற்பாட்டிலுள்ள கேமராக்களின் எண்ணிக்கை 09 ஆக மட்டும் காணப்படுவதுடன் செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற எஞ்சிய 14 கேமராக்களையும் திருத்துவதற்கு அல்லது போதுமான அளவு புதிய கேமராக்களை பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்ற கேமராக்களை அத்தியாவசியமான இடங்களை பூரணப்படுத்தும் வகையில் மீண்டும் நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் புதிய 03 கேமராக்களை மற்றும் 02 Network Switch திருத்தங்களை மேற்கொண்டு பொருத்தப்பட்டுள்ளது. புதிய CCTV கேமரா கட்டமைப்பொன்றை பொருத்துவதற்கு பெறுகைகள் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தில் காணப்படுகின்ற ஆவணங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 முகாமைத்தவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015ஆம் வருடத்தில் ரூபா 25,300,000 வுக்கு மதிப்பிடலின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 500,000 சுச்சி பத்திரங்களை கணினி மயப்படுத்தும் செயற்திட்டம் 2019 ஆம் வருடத்தில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் சரியான திட்டமிடலின் பிரகாரம் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தாததன் காரணமாக செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 09 வருட காலம் கடந்திருந்த போதிலும் | இதற்காக தரவுகளை தயாரிப்பதற்கு பின்பற்றப்படுகின்ற உயர் ஆவண கவுன்சிலினால் வெளியிடப்பட்டுள்ள General International Standard Archival Description (ISAD(G) என்ற சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைமையின் பிரகாரம் தற்போது இறுதி பரிசோதனை இடம்பெற்றுள்ள சுச்சி பத்திரம் ATOM மென்பொருளின் மூலம் | அரசின் நிதியத்தை ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2023 ஆம் வருடம் இறுதியிலும் ரூபா 13,489,788 செலவிடப்பட்டு உரிய பணியை நிறைவு செய்வதற்கு முடியாது போய் உள்ளது. | தரவுக்களஞ்சியத்தில் தாபிப்பதற்கு ஆலோசகர் ஒருவரின் சேவை அத்தியாவசியமானதாகும். அது இந்த செயற்திட்டத்தில் அல்லாமல் 2021.04.05 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் திணைக்களததிற்கான நம்பிக்கையான டிஜிட்டல் காப்பகம் ஒன்றை நிறுவும் செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு ஏற்பாடாகியுள்ளது. அந்த செயற்திட்டத்தின் பெறுகைகள் பணியொன்று ஆலோசகர் கம்பெனி ஒன்றை தெரிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்பாடாகிக்கொண்டு காணப்படுகிறது. | |
| (ஆ) | 2019 ஜனவரியில் இருந்து 2021 மே மாதம் வரையான காலத்தினுள் ரூபா 992,230,065 மதிப்பிடப்பட்ட தொகையில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த பிரதான அலுவலக கட்டிடம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் 02 வருட காலம் கடந்திருந்த போதிலும் நிர்மான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் அத்தினத்தில் ரூபா 470,780,777 செலுத்தப்பட்டு அந்த செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் நூற்றுக்கு 47 சதவீதமும் பௌதிக முன்னேற்றம் நூற்றுக்கு 53 சதவீதமும் ஆனது. | திருத்தப்பட்ட மதிப்பீடு மற்றும் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை தீர்மானம் கிடைத்த பின்னர் ஜூன் மாதத்திலிருந்து செயற்திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பிரதான அலுவலக கட்டிடம் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதாக. |
| (இ) | திணைக்களத்தின் மிகை ஆவணங்களை சேகரிப்பதற்காக 2,512 அமிலம் அல்லாத ஆவண சேகரிப்பு பெட்டிகளை ரூபா 19,237,273 வுக்கு கொள்வனவு செய்வதற்கு 2023 செப்டம்பர் 19 ஆம் திகதி கையளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் 2024 ஜனவரி 29 ஆம் திகதி திணைகளத்திற்கு பொருட்கள் கிடைக்கப்பெற்றிருந்தது. அதன் தரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக 20 - 24 இடையிலான செல்சியஸ் பாகையில் வெப்பத்தையும் மற்றும் | தற்போது உரிய காப்பகத்தில் உள்ள இந்த ஆவண சேகரிப்பு பெட்டிகளை களஞ்சியத்தில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விநியோகஸ்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு உத்தரவாத சான்றிதழ் பாதுகாத்துக்கொள்ளப் பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 30%-50 % இடையிலான ஈரப்பதத்துடன் கூடிய சூரிய ஒளியில் வெளிப்படுத்தப்படாத செயலிழக்கப்படாத கால நிலை கட்டுப்பாட்டு கட்டமைப்பினுள் மிகவும் சரியான அமில மையப்படுத்தலுக்காக வானை இராக்கைகளில் களஞ்சியப்படுத்தப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பின்பற்றப்படாமல் 2024 மே 02ஆம் கணக்காய்வு திகதி வரையான 03 மாத காலம் அந்த பெட்டி களஞ்சியத்தினுள் கீழே அடுக்கப்பட்டு விளைவற்று வைக்கப்பட்டதனால் காட்டப்பட்ட சுடடிகளின் பிரகாரம் களஞ்சியப்படுத்தாததன் காரணமாக 05 வருடங்களுக்கான உத்தரவாத சான்றிதழ் செல்லுபடியற்றதாகும் அபாயமொன்று காணப்பட்டது. | | |

## 4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 286 பதவியணியினரில் 137 பதவிகளுக்கு அவ்வாறெனில் நூற்றுக்கு 48 பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அது திணைக்களத்தின் ஆவணங்கள் மற்றும் மிகைஆவண முகாமை தாமதமாவதோடு எதிர்காலமொன்று வரைக்கும் விடய புலமையுடைய உத்தியோகத்தர்களின் பிண்ணனியொன்று நிர்மாணமாவதுமான திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயலாற்றலை அண்மிப்பதற்கு மோசமான பாதிப்பை ஏற்படுத்தி யிருந்தது. அந்த பதவி வெற்றிடங்களினுள், சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் நூற்றுக்கு 50 உம் மூன்றாம் நிலையிலான பதவிகள் நூற்றுக்கு 80 உம் மற்றும் இரண்டாம் மட்டத்திலான பதவிகள் நூற்றுக்கு 64 உம் உள்ளடங்கியுள்ளது. | 2023 ஆம் வருடத்தில் 26 ஆரம்ப வகுப்பு பதவிகளுக்காக பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படை அணியில் இருந்து ஆட் சேர்க்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் 56 பதவிகளுக்கு ஆட் சேர்ப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் ஆட் சேர்ப்பதற்குரிய ஏனைய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | ஊழியர் பற்றாக்குறைகளை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைகளத்தின் ஆவண காப்பு பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட 27 பதவிகளில் 24 பதவிகள் பற்றாக்குறையாக காணப்படுவதன் காரணமாக ஆவணக் காப்பு நிலையில் காணப்படுகின்ற ஆவணங்களின் காப்பு நடவடிக்கைகள் தாமதமடைவதற்கு காரணமாக உள்ளது. | ஆவனக்காப்பு பதவிகள் 18க்காக திறந்த முறைமையின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு போட்டி பரீச்சை 2024 ஏப்ரல் 20ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. பரீட்சை முடிவுகளின் பிரகாரம் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | திணைக்களத்தின் செயலாற்றலை பாதிக்கும் பதவிகளின் பற்றாக்குறைகளை துரிதமாக நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |